தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநரின் செயல்முறைகள்,சென்னை–6

ந.க.எண்:032901/எம்/இ2/2020, நாள்:31.07.2020

பொருள்: பள்ளிக்கல்வி – சுதந்திர தின விழா 2020 – 15.08.2020 (சனிக் கிழமை) அன்று இந்திய திருநாட்டின் 74–வது சுதந்திர தின விழாவினை அனைத்து சார்நிலை அலுவலகங்கள் மற்றும் பள்ளிகளில் கொண்டாடுதல் – அறிவுரைகள் வழங்குதல் சார்பு

பார்வை: Letter from Principal Secretary to Government, Public (General–I) Department, Secretariat , Chennai–9. Letter No. 14149/Gen.I/2020, Dated:23.07.2020

******

பார்வையில் காணும் அரசுக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள அறிவுரைகளின் அடிப்படையில், நமது இந்திய திருநாட்டின் 74–வது சுதந்திர தின விழாவினை 15.08.2020 அன்று, பள்ளி கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டிலுள்ள அனைத்து முதன்மை கல்வி அலுவலர் அலுவலகங்கள் / மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகங்கள்/அனைத்து கல்வி அலுவலகங்கள் மற்றும் அனைத்து வகைப் பள்ளிகளில் பின்வரும் வழிமுறைகளைப் பின்பற்றி எளிய முறையில் சிறப்பாக கொண்டாடுமாறு அறிவுறுத்தலாகிறது.

**வழிகாட்டு நெறி முறைகள்:**

1. அனைத்து முதன்மை கல்வி அலுவலர் அலுவலகங்கள்/ மாவட்ட கல்வி அலுவலர் அலுவலகங்கள்/அனைத்து கல்வி அலுவலகங்களிலும் சுதந்திர தின விழாவினை, சமூக இடைவெளியியைப் பின்பற்றி எளிமையான முறையில் கொண்டாடுதல் வேண்டும்.
2. அனைத்து வகைப் பள்ளிகளிலும் தேசிய கொடியினை ஏற்றி விழாவினை எளிமையாக கொண்டாடுதல் வேண்டும்.
3. கொரோனா தொற்று தடுப்பு நடவடிக்கையின் முன் களப் பணியாளர்களாக செயல்படும் மருத்துவர்கள், சுகாதாரப் பணியாளர்கள் மற்றும் தூய்மைப் பணியாளர்களின் சேவையினைப் பாராட்டும் பொருட்டு அவர்களை மேற்படி விழாவிற்கு அழைத்து சிறப்பிக்க வேண்டும்.
4. கொரோனா தொற்று ஏற்பட்டு தற்போது பூரண குணமடைந்த நபர்களையும் மேற்படி விழாவிற்கு அழைக்கலாம்.

குறிப்பு:

(i). சுதந்திர தின விழாவின் போது , கொரோனா தொற்று பாதுகாப்பு / தடுப்பு நடவடிக்கைகளான சமூக இடைவெளியை பின்பற்றுதல், முகக் கவசம் அணிதல் மற்றும் கூட்டங்களைத் தவிர்த்தல் வேண்டும்.

(ii). கைகளை சுத்தம் செய்ய கிருமி நாசினி வசதி ஏற்படுத்துதல் மற்றும் கோவிட்-19 சார்பான சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகத்தின் வழிகாட்டு நெறிமுறைகளைப் கண்டிப்பாக பின்பற்றுதல் வேண்டும்.

மேற்கண்ட வழிமுறைகளைப் பின்பற்றி சுதந்திர தின விழாவினை எளிமையாக கொண்டாடி அதன் விவரத்தினை இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைக்கும் படி அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு: பார்வையில் காணும் கடிதம்

30/07/2020

பள்ளிக்கல்வி இயக்குநர்

31/07/2020

பெறுநர்

அனைத்து முதன்மைக்கல்வி அலுவலர்கள்/
மாவட்ட கல்வி அலுவலர்கள்/
வட்டாரக் கல்வி அலுவலர்கள்

நகல்

1. அரசு முதன்மைச் செயலாளர்,
பள்ளிக்கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை-9-அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.

2. அரசு முதன்மைச் செயலாளர்,
Public(General-I) Department,
தலைமைச் செயலகம்,
சென்னை-9-அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

**Independence Day Celebrations – 2020**

032901
M.

Public (General-I) Department,
Secretariat, Chennai - 600009.

**Letter No.14149/Genl.I/2020-55, Dated:23.07.2020**

From
Dr. P. Senthilkumar, I.A.S.,
Principal Secretary to Government (FAC)

To
All Heads of Departments.

Sir/Madam,

Sub: Independence Day Celebrations, 2020 – Arrangements – Regarding.
=====

I am to state that the ensuing Independence Day will be celebrated in Chennai City with the Hon'ble Chief Minister hoisting the National Flag at Fort Ramparts in the morning of 15$^{th}$ August, 2020.

2. I am to request you to arrange for hoisting the National flag in your office and in all the Subordinate Offices under your administrative control on 15.08.2020.

3. I am to state that in view of the prevailing COVID-19 pandemic, preventive measures such as maintaining social distancing, wearing of masks, proper sanitization, avoiding large congregations, protecting vulnerable groups, etc., and other measures as prescribed and recommended by the Ministry of Health & Family Welfare are followed. It would be appropriate that Covid-19 warriors like doctors, health workers, Sanitation workers, etc., are invited in the ceremony as recognition of their noble service in flight against Covid-19 Pandemic. Some persons cured from Covid infection may also be invited.

4. I am to state that there will be no restriction for the use of National Flag by the Public on that day. However, the restriction on the display of National Flag on motor cars as laid down in Section IX of Flag Code of India 2002 shall continue.

Yours faithfully,
As. Perumal...
23/07/2020
for Principal Secretary to Government.

8R
25/07/2020